**கேகாலை பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கேகாலை பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2010 சனவரி 19 ஆந் திகதிய PED 54 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கைகளின் படி 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் சகல உள்ளுராட்சி நிறுவனங்களினதும் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த நியமம் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 309,556 தொகை கணக்கிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆயுர்வேத மருந்து இருப்பு விநியோத்தல்களின் பெறுமதி ரூபா 89,111 ஆக இருந்த போதிலும் ஆண்டின் கொள்வனவுகளின் பெறுமதியான ரூபா 162,782 தொகை செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட காரணத்தால் ஆண்டின் செலவினம் ரூபா 73,671 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் முத்திரை வருமானம் கணிப்பீடு செய்வதற்காக செலுத்தப்பட்ட ஊக்குவிப்புப்படி ரூபா 82,575 தொகை மீளாய்வாண்டின் செலவினமாகக் கணிப்பீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் மிகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 136,300 தொகையான கடன் மீதியும் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 126,150 தொகையான கடன் மீதியும் தீர்க்கப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சப்ரகமுவ மாகாண சபை பிரதம செயலாளருக்குரிய ரூபா 5,888,000 தொகையான 05 வாகனங்களில் உரித்தை சபைக்கு கையேற்கப்படாமல் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் செப்தெம்பர் முதல் நவம்பர் வரை நீதிமன்றத் தண்டப் பணம் கணிப்பீடு செய்வதற்காக செலுத்த வேண்டிய ஊக்குவிப்புப் படியான ரூபா 45,854 தொகை கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(எ) மீளச் செலுத்த வேண்டிய வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தக்காரரின் வைப்புக் கணக்கின் மீதி செலவு மீதியொன்றாக இருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் படி ரூபா 234,868 தொகை வரவு மீதி காணப்பட்டது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,851,763 ஆக இருந்ததுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் படி கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,467,112 ஆனமையால் வேறுபாடு ரூபா 4,384,651 ஆக இருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,319,915 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,402,081 ஆக இருந்தது.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 7,160,908 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 363,922 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

2014 யூன் 13 ஆந் திகதி வரையில் 03 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 11,796,260 ஆகும்.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| 371(2)(இ) | 2005 சனவரி 19 ஆந் திகதி சுனாமியால் பாதிப்பிற்குள்ளாகியவருக்கு உதவிகளை வழங்குவதற்காக தலைவர் பெற்ற ரூபா 25,000 முற்பணம் 2014 யூன் 20 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சப்ரகமுவ மாகாணசபையின் நிதி விதிக்கோவை | |
| 422.2 விதி | கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படாது பொதுச் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரம் ரூபா 604,525 தொகை செலவில் வீதி விளக்குகளின் 80 தொகுதிகளும் டிஜிடெல் கெமராக்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் மற்றும் சப்ரகமுவ உள்ளுராட்சி ஆணையாளரின் 2005 யூன் 01 ஆந் திகதிய 2005/14 ஆம் இலக்க சுற்றறிக்கை | |
| 3(ii) | பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 18 ஏக்கர் 2 றூட் 32 பேர்ச்களையுடைய 5 காணிக்கூறுகள் உறுதி இலக்கம் மற்றும் பெறுமதியுடன் 1 சதவீத வரித்தொகை சபைக்கு செலுத்தாமை தொடர்பாக சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 3(iii) | ஒரு ஹெக்டேயருக்கு மேற்பட்ட காணிகளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யும் போது அந்தக் காணியின் அளவில் 10 சதவீதமான காணியின் அளவு உறுதியின் மூலம் சபைக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் 18 ½ ஏக்கர் அளவான ஒரு ஹெக்டேயருக்கு மேற்பட்ட 5 காணிகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் 331.28 பேர்ச் சில அளவு சபைக்கு உரித்தற்றிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,077,745 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,972,423 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 7,105,322 இனால் அதிகரிப்பதற்கு ஏனைய வருமானங்களின் அதிகரிப்பு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களின் எல்லையினை விஞ்சி ரூபா 2,085,000 தொகை உள்ளபடியான செலவினம் மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,394 | 829 | 363 |
| (ii) | வாடகை | 1,005 | 957 | 277 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,132 | 1,460 | 14 |
| (iv) | ஏனைய வருமானம் | 3,350 | 42,020 | 14,463 |

#### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் என்பவற்றின் பெறுமதி ரூபா 11,764,742 ஆக இருந்தன.

#### 2.3.3 அறிவித்தல் பாதைக் கட்டணம்

வருமானக் கட்டுப்பாட்டாளரால் கையளிக்கப்பட்ட அறிவித்தல் பதாதை தொடர்பான தகவல்களின் பிரகாரம் 05 அறிவித்தல் பதாதைகளிலிருந்து கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக சபை ரூபா 16,800 தொகையான வருமானத்தை இழந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,772,205 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சிய அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதியான ரூபா 58,965 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சம்பளமற்ற விடுமுறைக்கான அறவிடல்களைக் கணிப்பீடு செய்யும் போது சகல படிகளையும் உள்ளடக்கிய சம்பளம் அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஒன்றிணைந்த சம்பளம் மாத்திரம் அடிப்படையாகக் கொண்டமையால் சபை நிதியத்திற்கு 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 49,938 தொகையான நிதி நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் ஒரு ஊழியர் மீளாய்வாண்டின் போது பெற்ற 44 சம்பளமற்ற விடுமுறைகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 33,808 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆபத்தை விளைவிக்கும் மரங்களை வெட்டி அகற்றுவதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2013 வரை 04 வருடங்களின் போது சபைக்கு கிடைத்த 819 விண்ணப்பப் படிவங்களுக்கிடையே பரிசோதனை நடவடிக்கைகளுக்காக கையேற்ற கள உத்தியோகத்தர்களால் மீளக் கையளிக்காத எண்ணிக்கை 91 ஆகும்.

(ஈ) கட்டிட திட்டமிடல் குழுவின் அங்கத்தவரின் படி ஒவ்வொரு தினத்திற்காகவும் ரூபா 750 படி செலுத்துவதற்கு 2012 செப்தெம்பர் 28 ஆந் திகதி சபை தீர்மானம் எடுத்திருந்த போதிலும், அதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன் தெரிவுப் பரிசோதனைப்படி கட்டிட திட்டமிடல் குழு பி.ப 4.15 முதல் 4.45 வரை அரை மணித்தியாலத்திற்காகவும், மேற்கூறப்பட்ட படி செலுத்தப்பட்ட 05 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(உ) 2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற 20 வீடமைப்பு திட்டமிடல் குழுக்களை கருத்தில்கொள்ளும் போது வீடமைப்பு விண்ணப்பம் தொடர்பான பரிசோதனையில் பொது சுகாதார பரிசோதகரின் பங்குபற்றலின்றி 167 வீடமைப்பு விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(ஊ) 2010 ஆம் ஆண்டிற்காக மொரன்தொட்ட இல் அமைந்துள்ள சபைக்குரிய இரண்டு மாடிக் கட்டிடமொன்று கேள்வி கோரப்பட்டு மாதாந்த வாடகை ரூபா 6,100 படி உடன்படிக்கையின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டு வரையும் மீள கேள்வி கோரப்படாமலும் வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமலும் முன்னைய வாடகையாளருக்கு அக்கட்டிடம் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. வருடாந்த வாடகைப் பணம் அதிகரிக்கப்பட்டு பெறக்கூடியதக இருந்த வருமானமொன்றை சபை இழந்திருந்ததுடன் 2006 ஆம் ஆண்டின் பின்னர் 2013 வரை 08 வருட காலம் கடந்திருந்த போதிலும் கட்டிடத்தை மீளவும் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சபைக்குரிய பொதுச் சநதையின் கடைகளை வாடகைக்கு வழங்கும் போது உரிய வாடகை உடன்படிக்கைகளின் படி ஒவ்வொரு மாதத்தின் வாடகைப் பணமும் அந்த மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியதுடன் குறிப்பிடப்பட்ட திகதியில் உள்ளவாறு வாடகைப் பணம் செலுத்தாத போது வைப்புப்பணத்திலிருந்து நிலுவைப் பணம் அறவிடப்பட்டு வாடகையாளர் கடையிலிருந்து அகற்றப்பட வேண்டிய

போதிலும் பாதுகாப்பு பிணை வைப்பு இறுதி வரையிலும் உடன்படிக்கையின் படி உரிய நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 04 கடைகளிலிருந்து ரூபா 49,365 தொகை அறவிடமுடியாதிருந்தது.

(ஏ) கடன்கொடுத்தோர் கணக்கில் உள்ளடங்கிய 08 வருடங்களை விட பழைய 75 கடன்கொடுத்தோர் மீதிகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 1,014,550 தொகையான மீதி அங்கீகாரமின்றி அகற்றப்பட்டிருந்தது.

### 3.3 செயற்பாடற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 70,000 தொகையான தார் சூடாக்கி 08 வருட காலமாக செயற்பாடற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டது.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய அசைவுறாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 504,440 ஆகும்.

### 3.4 இனங்காணப்படாத நட்டம்

மீதெனிய, கங்குல்தெனிய கம்சபா வீதி ஒழுங்கைக்கு பக்கச் சுவர் நிர்மாணித்தல் தொடர்பாக கெட்டிமுல்ல மீதெனிய குடியிருப்பாளரிடமிருந்து ரூபா 50,000 தொகையான நட்டத்தை அறவிடும் வகையில் 2004 மார்ச் 24 ஆந் திகதி கேகாலை மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட 7027 ஆம் இலக்க காணி வழக்கு 2013 மார்ச் 06 ஆந் திகதி எதிராளியின் கட்டணத்தின் கீழ் கேட்டு விலக்கிக்கொள்ளப்பட்டிருந்தது. வழக்குத் தொடுக்கப்பட்டதன் நோக்கமான பக்கச் சுவர் அகற்றுவதற்கோ அல்லது ரூபா 50,000 நட்டத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்காது எதிராளிக்கு கட்டணம் செலுத்துவதின் கீழ் வழக்கை கேட்டு விலக்கிக் கொண்டமையின் காரணமாக சபைக்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 3.4 ஒப்பந்த நிருவாகம்

நிர்மாணம் தொடர்பான களப்பரிசோதனையின் போது காணக்கூடியதாக இருந்த குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (i) முற்கலவை (பிரீமிக்ஸ் செயற்திட்டம் )

சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி திருத்தும் நடவடிக்கைகளுக்காக சபையின் ஊழியர்களை ஈடுபடுத்தி முற்கலவை (பிரீமிக்ஸ்) செயற்திட்டம் நடாத்தப்பட்டிருந்ததுடன் 2012 மற்றும் 2013 என்ற இரண்டு வருடங்களில் வீதி திருத்தங்களுக்காக 71.75 கியூப் பிரீமிக்ஸ் விநியோகிக்கப்பட்ட போதிலும் இந்த பிரீமிக்ஸ் ஈடுபடுத்தப்பட்ட முறையில் காண்பிக்கப்படுகின்ற படி ஒவ்வொரு வீதிக்காகவும் அளவிடைப் பத்திரம் மற்றும் வேலைக் கிரய மதிப்பீடு என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த செயற்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பிரீமிக்ஸ் இற்காக செலவிடப்பட்ட உற்பத்திக் கிரயம் மற்றும் வீதி பழுதுபார்த்தல் / நிர்மாணங்களிற்காக தயாரிக்கப்பட வேண்டிய வேலை மதிப்பீட்டுக் கிரயம் ஈடுசெய்யப்பட்டு செயல் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கிரிகொனு தென்ன வீதிக்கு கொங்கீரீட் இடுதல் மற்றும் பக்கச் சுவர் நிர்மாணத்திற்காக 2012 மே 22 ஆந் திகதி புஸ்ஸெல்ல மஹசேன் விவசாய அமைச்சுடன் ரூபா 968,888 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையில் வேலை விடய இலக்கம் 5 இன் படி அங்கீகரிக்கபட்ட மண் வழங்கப்பட்டு ஆலோசனையின் படி பரவுவதற்காக ஒரு மண் கியூபிற்காக ரூபா 4,099 படி 23 3/4 கியூப் மண்ணுக்காக ரூபா 97,475 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கொங்கிரீட் இடப்பட்ட வீதி மற்றும் பக்கச் சுவருக்கிடையே 2 ½ அடி அகலத்திலும் 30 அடி நீளத்திலும் உள்ள பகுதி ஒரு அடியளவான பள்ளத்திற்கு மண் நிரப்பி மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் நிதி மற்றும் நிருவாக விதிக் கோவையின் 5(7) இன் படி காசு மற்றும் களஞ்சியங்கள் தொடர்பில் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்